1990 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பழையாறு துறைமுகத்திற்கு சிந்தனை சிற்பி சிங்காரவேலர் அவர்களுடைய பெயர், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு சூட்டப்பட்டு இருக்கிறது. ஆனால் சென்னை துறைமுகத்திற்கு சிந்தனை சிற்பி சிங்காரவேலர் அவர்களின் பெயரை வைக்கவேண்டு மென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை விடுத்துக்கொண்டிருக் கிறார்கள். ஆனால் அது மத்திய அரசினுடைய பொறுப்பில் இருக்கின்ற காரணத்தால் அவ்வாறு பெயர் சூட்டுகிற பொறுப் பும் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. ஆனால் ஏற்கனவே இருந்த மத்திய அரசு அதனை நிராகரித்துள்ளது. எனினும் உறுப்பினர் அவர்களுடைய கருத்தினைக் கவனத்தில் கொண்டு மத்திய அரசுக்கு இதனைத் தெரிவித்து வலியுறுத்துவோம்.

சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகம்

*3057—திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுக வேலை எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) விரைவாக முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகப் பணிகளுள் மேற்கு அலைத்தடுப்புச் சுவர், கிழக்கு அலைத்தடுப்புச் சுவர் ஆகிய இரு பணிகள் நிறைவுற்றுள்ளன. நில சீராக்கப்பணி (Reclamation) மற்றும் கரையோரச் சுவர் (Quay wall) அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 412 மீட்டர் நீளத்திற்கு கரையோரச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) விரைவாக முடிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற பெரும் பான்மையான மீனவர்கள், ஏற்கெனவே இருந்த மீன்பிடித் துறைமுகம் இதுவரையில் செயல்படாத காரணத்தால் கேரள மாநிலத்தில் உள்ள எர்ணாகுளம் போன்ற இடங்களுக்குச் சென்று மீன்பிடிக்க, அங்கேயுள்ள மீனவர்களுக்கும் நம்மவர்களுக்கும் தகராறு ஏற்படக்கூடிய வகையில் பல பிரச்சினைகள் அடிக்கடி உருவாகிக் கொண்டிருக்கின்றன. எனவே, கன்னியாகுமரி மாவட்

டத்தில் உள்ள ஏராளமான மீனவர்கள் அதிகமான மீன்களைப் பிடித்து நம்முடைய பகுதியிலேயே வியாபாரம் செய்கிற வகையில் அந்தத் துறைமுகப் பணியை இந்த ஆண்டே முடித்திடவும், மேலும் இனையம் போன்ற இடங்களில் அதிகமான அளவில் சின்ன மீன்பிடித் துறைமுகங்களை அமைத்திடவும் இந்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னமுட்டம் துறைமுகப் பணி 1982-ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. பல்வேறு காரணத் தால் அந்தப் பணிகள் விரைவாக நடைபெறாத காரணத்தால் அதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. ஆனால் இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அந்தப் பகுதி மீனவர்களுக்கு பயன் அளிக்கிற வகையில் விரைவில் அந்தத் துறைமுகத்தைக் கட்டி முடிக்கவேண்டுமென்று அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. 1982 ஆம் ஆண்டு 234 இலட்சம் ரூபாய்க்கு அனுமதி வழங்கி, அதாவது மத்திய அரசு 50 சதவீதம், மாநில அரசு 50 சதவீதம் என்ற அளவுக்குரிய நிதியுடன் இந்தத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இப்போது மறு மதிப்பீட்டின் அடிப்படையில் 684 இலட்சம் ரூபாய் ஆகிறது. கால்நடை பராமரிப்பு மற்றும் மீனளத் துறையின் அரசாணை 72-ன் மூலம் ரூபாய் 684 இலட்சத்திற்கு 6—2—1990 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அந்த அளவுக்கு விரைவாக பணிகள் நடைபெற்று வருகின்றன. வருகிற ஜூன் 1990-க்குள் ளாக அந்தப் பணிகள் முடிவடைந்து விடும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். அடிப்படை வசதி ரோடு வசதி போன்ற மற்றைய பணிகள் வருகிற ஏப்ரல் 1991-க்குள்ளாக நிச்சயமாக முடிவடைந்துவிடும். அது மீனவர்களுக்குப் பயன்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

10—00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புத லுடன் வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனையாகாமல் தேங்கியுள்ள துணிகள் மதிப்பு.

*1536—திரு. எஸ் எஸ். கருப்பசாமி,
திரு. என். பழனிவேல்,
திரு. மா. மணிமாறன் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1-1-1989 அன்றுள்ளபடி, மாநில முழுவதுமுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் விற்பனையாகாமல் தேங்கி யுள்ள துணிகளின் மொத்த மதிப்பு என்ன ?